வன்முறைக்கு உள்ளானோருக்கான சிறப்பு மையம்

ரகசியமானது. இலவசம். அனைவருக்குமானது. 052 625 25 00

Fachstelle
gewaltbetroffene schaffhausen

எனக்கு இப்படி ஒன்று நடக்கும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை.

நீங்களோ உங்களுக்கு நெருக்கமான நபரோ உடல்ரீதியாகவோ மனரீதியாகவோ பாலியல்ரீதியாகவோ வன்முறையை அனுபவித்தது உண்டா? நீங்கள் உடல்ரீதியாகத் தாக்கப்பட்டிருக்கிறீர்களா அல்லது அச்சுறுத்தல்களைப் பெற்றிருக்கிறீர்களா? நீங்களே வன்முறையை அனுபவித்திருந்தாலும் சரி அல்லது அதை நீங்கள் நேரில் பார்த்திருந்தாலும் சரி, அது பொதுவாக எதிர்பாராத ஒன்றே. யாரும் உதவிக்கு இல்லை என்ற எண்ணம், கோபம், பயம் போன்ற உணர்ச்சிகளை அது தூண்டி, உங்கள் வாழ்க்கையை முற்றிலும் தலைகீழாக்கிடும். வன்முறைக்கு உள்ளானோருக்கான சிறப்பு மையத்தில் பணிபுரியும் நாங்கள், வன்முறை அனுபவத்தை உளவியல்ரீதியாகக் கையாள்வது முதல், சட்டச் சிக்கல்களைத் தெளிவுபடுத்துவது, அவசரகாலத் தங்குமிடங்களை ஏற்பாடு செய்வது வரை உங்களுக்கு உதவிசெய்து, இந்தச் சூழ்நிலைகளில் உங்களுக்கு ஆலோசனை வழங்குகிறோம்.

எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்:

052 625 25 00

Confidential. Free of charge.
For everyone.

Confidentiel. Gratuit.
Pour toutes et pour tous.

Confidencial. Gratis. Para todos.

Поверљиво. Бесплатно. За сваког.

Konfidenciale. Pa pagesë. Për të gjithë.

Anonim. Ücretsiz. Herkes için.

ስቱርሪ። ነጻ። ንኾሉ ሰብ።

Конфиденциально. Бесплатно. Для всех.

ரகசியமானது. இலவசம்.
அனைவருக்குமானது.

سريّ. مجانيّ. للجميع.

Download our Flyer
in your language
fsgb-sh.ch/downloads

நீங்கள் வன்முறையை எதிர்கொண்டால் நாங்கள் உங்களுக்காக இருக்கிறோம்

அனைத்துத் தகவல்தொடர்புகளும் முற்றிலும் ரகசியமானவை மற்றும் சட்டப்பூர்வ ரகசியத்தன்மைக்கு உட்பட்டவை.

குடும்ப வன்முறை

- உங்கள் துணைவர் உங்களைத் தாக்கினாரா?
- உங்கள் பிள்ளையால் நீங்கள் அச்சுறுத்தப்படுகிறீர்களா?
- குடும்ப உறுப்பினர் ஒருவர் உங்களைத் தகாத வார்த்தைகளால் திட்டுகிறாரா, துன்புறுத்துகிறாரா, காயப்படுத்துகிறாரா அல்லது எதற்கேனும் வற்புறுத்துகிறாரா?
- உங்களுக்கு நெருக்கமான ஒருவர் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவரா?

பாலியல் வன்முறை

- உடலுறவு வைத்துக்கொள்ளும்படி நீங்கள் கட்டாயப்படுத்தப்பட்டீர்களா?
- நீங்கள் ஓய்வாக இருக்கும்போதோ பணியிடத்திலோ பள்ளியிலோ பாலியல் துன்புறுத்தலை (எ.கா. வார்த்தைகள், சைகைகள், தொடுதல், குறுஞ்செய்தி போன்றவற்றின் மூலம்) எதிர்கொண்டீர்களா?
- நீங்கள் பலாத்காரம் செய்யப்பட்டீர்களா அல்லது பாலியல் வன்கொடுமைக்கு ஆளானீர்களா?
- உங்களுக்கு நெருக்கமான ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டவரா?

குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு எதிரான வன்முறை

- உங்கள் பெற்றோரோ உறவினர்களோ மற்றவர்களோ உங்களைத் தாக்குகின்றனரா அல்லது உதைக்கின்றனரா?
- ஆன்லைனிலோ பள்ளியிலோ நீங்கள் ஓய்வாக இருக்கும்போதோ வீட்டில் இருக்கும்போதோ யாராவது உங்களை அச்சுறுத்தவோ தகாத வார்த்தைகளால் திட்டவோ மிரட்டவோ செய்திருக்கிறார்களா?
- பாலியல் செயல்பாடுகளில் ஈடுபடும்படி யாராவது உங்களைக் கட்டாயப்படுத்தியுள்ளனரா?
- வன்முறையால் பாதிக்கப்பட்ட ஒருவரை உங்களுக்குத் தெரியுமா?

பொதுவான வன்முறை

- நீங்கள் மற்றொரு நபரால் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டுள்ளீர்களா?
- நீங்கள் சாலை விபத்தில் சிக்கி, காயமடைந்திருக்கிறீர்களா?
- ஆன்லைனிலோ நிஜ வாழ்க்கையிலோ யாரேனும் உங்களைப் பின்தொடர்கிறார்களா அல்லது துன்புறுத்துகிறார்களா?
- கட்டாய நலன்புரி நடவடிக்கைகளால் (எ.கா. வளர்ப்பு இல்லங்களில் தள்ளப்படுதல் போன்றவை) நீங்கள் பாதிக்கப்பட்டவரா?
- கட்டாயத் திருமணம் அல்லது ஆள் கடத்தல் மூலம் நீங்கள் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
- உங்களுக்கு நெருக்கமான ஒருவர் வன்முறையால் பாதிக்கப்பட்டவரா?

எங்கள் சேவைகள்

ஆலோசனை வழங்குகிறோம்:

- எதிர்கொண்ட வன்முறை தொடர்பாக.
- சாத்தியமான அடுத்த படிகளை திட்டமிட.
- பாதிக்கப்பட்டவர் என்ற முறையில் உங்கள் உரிமைகளுக்காக.
- குற்றவியல் புகாரைப் பதிவுசெய்ய.

உதவி வழங்குகிறோம்:

- வன்முறை அனுபவம் மற்றும் அதன் உளவியல் விளைவுகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல்.
- வன்முறையால் பாதிக்கப்பட்டவருக்கு நிதிரீதியாக உதவுதல்.
- நிபுணரைக் கண்டறியவும், உளவியல்ரீதியான மற்றும் சட்டரீதியான ஆதரவைக் கண்டறியவும் உதவுதல்.
- அவசரகாலத் தங்குமிடங்களைக் கண்டறிந்து தருதல்.

தெளிவுபடுத்தலை வழங்குகிறோம்:

- அடுத்த நடவடிக்கைகளை எவ்வாறு எடுக்கலாம்.
- எந்த நிதிரீதியான உரிமைகோரல்களை எவ்வாறு செய்யலாம்.
- கூடுதல் ஆதரவையும் உதவியையும் எங்கே பெறலாம்.

நிபுணர்களுக்கான ஆலோசனை

யாரெல்லாம் எங்களைத் தொடர்புகொள்ளலாம்?
சமூக சேவகர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பணி வழங்குநர்கள், தங்களின் தினசரிப் பணியில் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் எதிர்கொண்டவர்கள் அனைவருக்கும் நாங்கள் ஆதரவளிக்கிறோம்.

எங்கள் சேவையில் அடங்குபவை என்னென்ன?
வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிய விரிவான அறிவுடன் கூடிய ஒரு சிறப்புச் சேவை மையமாக, வன்முறை குறித்த நிபுணத்துவம் வாய்ந்த சிந்தனை மற்றும் தொழில்முறை ஆலோசனைக்கான இடத்தை நாங்கள் வழங்குகிறோம். வன்முறை குறித்து உங்களுடைய சந்தேகத்தை நீங்கள் எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்று காட்டுகிறோம் மற்றும் சாத்தியமான நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்துகிறோம், வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களைக் கையாள்வது எப்படி என்று ஆலோசனை வழங்குகிறோம். அத்துடன் அடுத்த படிகளைத் திட்டமிடவும் பணிபுரியும் இடங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நாங்கள் உங்களுக்கு உதவுகிறோம்.

இந்தச் சேவையின் மூலம் நான் எவ்வாறு பலனடைவேன்?
முதலாவதாக, உங்களால் என்ன செய்ய முடியும், வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீங்கள் சிறந்த முறையில் ஆதரவளிப்பது எப்படி, எந்தச் செயல்கள் தடையாகக் இருக்கக்கூடும் போன்றவற்றை அறிந்துகொள்வீர்கள். வன்முறை குறித்த கூடுதல் விழிப்புணர்வை நீங்கள் பெறுவதுடன், வன்முறை எதனால் ஏற்படுகிறது என்பதைப் பற்றிய சிறந்த புரிதலைப் பெறுவீர்கள்.

நான் எப்போது உங்களைத் தொடர்புகொள்ள வேண்டும்?
யார் வேண்டுமானாலும் எங்களைத் தொடர்புகொள்ளலாம், முடிந்தளவு விரைவாகத் தொடர்புகொள்வது நல்லது. பள்ளிகள், கூட்டமைப்புகள், நிறுவனங்கள் போன்றவற்றுக்கு நாங்கள் வன்முறைத் தடுப்புத் திட்டங்களையும் வழங்குகிறோம் – இதுகுறித்து உங்களுடன் கலந்துரையாடத் தயாராக இருக்கிறோம்.

fachstelle
gewaltbetroffene
schaffhausen

Fachstelle für Gewaltbetroffene
Neustadt 23 | 8200 Schaffhausen
Tel. 052 625 25 00
fachstelle@fsgb-sh.ch
www.fsgb-sh.ch

தொலைபேசி நேரங்கள்:

திங்கள் முதல் வெள்ளி வரை: 08:00 - 12:00 **மற்றும்** 13:30 - 17:00